# நஷ்டஈடு செலுத்துவது மக்கள்



மிலிந்த மொறகொட

அரச ஊழியர்கள் சம்பள உயர்வு கோரினார்கள். அரசாங்கம் கோரிக்கையை செவிமடுத்தது. இருப்பினும், முழுமையாக அல்ல. அதிகரிக்கும் சனத்தொகைக்கு இது போதுமானதல்ல. தமது சேவையை இழக்குமளவுக்கு அச்சுறுத்தல் விடுப்பார்கள். வேலை நிறுத்தம் நாட்டுக்கு வழமையான தொன்றாகும். அரசாங்கத்துக்கும் கோரிக்கை விடுப்பவர்களுக்கும் இடையே வாத, விவாதங்கள், மோதல்கள் இடம்பெறும். வேலை நிறுத்தப்படும். நெருக்கடிக்கு முகம் கொடுப்பது மக்களே.

சம்பளப் பிரச்சினைக்கு உட் காரணம் உண்டு. அது இல்லாத சொத்தை ஏலமிடுவது போன்றது. அதாவது தேர்தல் வாக்குறுதி போல் அரசியல் மேடையில் வாக்குறுதிகளை அளிப்பது, இலட்சக்கணக்கான அரச நியமனங்களை வழங்கல் ஒன்று. சம்பள உயர்வென்பது மற்றொன்று. இதில் அதிகளவு ஏல விற்பனை செய்யும் கட்சி ஆட்சியை கைப்பற்றும். அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.இலங்கையில் இன்று அரச சேவை என்பது பாரிய அலகாகும். சுமார் 20 இலட்சம் அதாவது மக்கள் தொகையில் அதிக சதவீதம் அரச சேவையில் உள்ள ஒரு நாடாகும். 10 பேரில் ஒருவர் அரச சேவையில் இருந்தால் மக்களுக்கு சௌகரியம் இருப்பினும் மக்கள் அரச அலுவலகங்களில் சேவையை பெற்றுக்கொள்ள அதிக தினங்களை செலவளிக்க நேரிடுகிறது. மக்கள் மகிழ்ச்சி அடைந்தாலும் இல்லாவிட்டாலும் மாத இறுதியில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் கிடைக்கும். சம்பளம் கொடுப்பது திறைசேரியில் இருந்தாகும். சம்பள உயர்வை கோரி செய்யும் ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் அதை வழங்குவதற்கு தீர்மானம் எடுத்தால் அந்த செலவை சுமப்பது திறைசேரியே ஆகும். அங்கு செல்வம் உற்பத்தியாகும் ஊற்று கிடையாது. வரிப்பணமே அங்கு சேருகின்றது.

நாட்டு மக்கள் அனைவரும் வரி செலுத்துகிறார்கள். தாம் வரி செலுத்துவது தெரிந்தும் அரசுக்கு வரி செலுத்துபவர்கள் நாட்டில் வாழ்கிறார்கள். அவர்கள் வருமானவரி செலுத்துபவர்களாவர். மற்றவர்கள் அங்குமிங்குமாக செய்யும் கொடுக்கல் வாங்கல்களில் தமக்கு தெரியாமலே வரி செலுத்துகிறார்கள். அது வரி அரச வருமானத்தில் சேரும். அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கும் சம்பள உயர்வு கேட்கும்போது அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதும் இந்த வரி வருமானமாகும். செலவு அதிகரிக்கும் போது வருமானத்தை அதிகரிக்க வேண்டியிருக்கும். வருமானத்தை அதிகரிக்க வேண்டுமானால் அதிகளவாக வரியை மக்களிடமிருந்து அறவிட ஏற்படும். இல்லையென்றால் செலவினை சமாளிப்பதற்கு கடன் பெற நேரிடும். உற்பத்தி அதிகரிக்காத வருமானம் உருவாகாத நிலையில் அதிகளவு வழங்குவது நஷ்டஈடாகும். இந்த நஷ்டஈட்டை செலுத்துவது எவ்வாறு என்று விளங்கிக் கொள்வது மிக முக்கியமானதாகும். வறிய மக்கள் அதிகளவு வரி செலுத்துவது கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகளை ஏலமிடும் அரசியல் பொறிக்கே. நாட்டுக்கு தேவையானது செயற்திறன் மிக்க நிர்வாக கட்டமைப்பாகும்.அது சரியான முறையில் செயற்படுத்தப்பட வேண்டும். நிறுவனம் உருவாகும் போது அதனால் மக்களுக்கு அதிக சேவை வழங்கப்படும் இதனால் அதிக வருமானத்தை உருவாக்க முடியும். அந்த வருமானத்தின் ஒரு பகுதி உழைக்கும் மக்களுக்கு சொந்தமாக்கப்படல் வேண்டும். அவ்வாறான மாற்றம் அவசியம். மக்கள், மக்களுக்காக தோன்றும் மேடை இது தொடர்பாக சிறந்த விவாதத்துக்கு அறைகூவல் விடுக்க வேண்டும்.

www.milindaprashna.wordpress.com